## 1.1 அபிப்பிராயம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்த 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107(5) உபபிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றன எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி | 1989 ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை கற்கை லீவு பெற்று வெளிநாடு சென்றிருந்த | 1989 ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை முறிகளை மீறிய அலுவலர்களுக்கிடையில் மூன்று பேர்களிடம் | அறவிடப்பட வேண்டிய பணத் தொகை தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் V இல் பந்தி 7.6 | 36 அலுவலர்கள் மீண்டும் சேவைக்கு சமூகமளிக்காமை காரணமாக முறிகளை மீறியதால் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 67,132,548 தொகை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அறவிடப்படாமை | அறவிடப்பட வேண்டிய பணத் தொகை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும், எஞ்சிய 11 பேர் தொடர்பில் வழக்கு தொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வழக்கு கோவையிடப்பட்ட 8 பேர்களும் முகவரிகளில் இல்லாமையால் மீதி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இயலாதுள்ளது. | அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுகளின்படி 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக பல்கலைக்கழகத்தின் நிதிசார் விளைபயன் ரூபா. 528,714,822 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 352,552,779 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 176,162,043 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு கற்கை சேவைகளின் அதிகரிப்பு பிரதான காரணமாகியிருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

- இலாப விகிதாசாரம்

  மீளாய்விற்கான ஆண்டில் பற்றாக்குறை ரூபா. 528,714,822 ம், மொத்த வருமானம் ரூபா. 3,224,090,058 ம், ஆகியதால் இலாப விகிதாசாரம் 16.4% ஆன எதிர்மறை பெறுமதி காணப்பட்டதுடன். கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 13.8% ஆன எதிர்மறை பெறுமதியைக் கொண்டிருந்தது.

- நடைமுறை விகிதாசாரம்

  மீளாய்விற்கான ஆண்டில் மொத்த நடைமுறை சொத்துக்கள் ரூபா. 826,651,804 ம், நடைமுறை பொறுப்புகள் ரூபா. 654,608,749 ம் ஆகியதால் நடைமுறை விகிதாசாரம் 1.26:1 ஆனதுடன், கடந்த ஆண்டின் அந்த விகிதாசாரம் 0.9 :1 என்ற வகையில் நிலவியதாக அவதானிக்கப்பட்டது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலாப் பகுதிக்குள் பல்வேறு | பல்கலைக்கழகத்திலிருந்து விலகியுள்ள ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி அவர்களின் ஊழியர் சேமலாப | சேவையில் விலகியுள்ள அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| | காரணங்களால் சேவையிலிருந்து விலகியுள்ள 25 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 1,186,370 தொகை அறவிடுவதற்கு 2020 மே மாதமாகும்போதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிதியத்திற்கு விடுவிக்கையில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்படும் பிராந்திய நிலையங்கள் மற்றும் 18 கற்கை நிலையங்களில் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா. 576,890,180 பெறுமதியிலான கட்டிடங்களை நிருமாணித்திருப்பினும், அந்த நிருமாணிப்புகளை மேற்கொண்ட காணிகளில் சட்டரீதியான உரிமையை பல்கலைக்கழகத்திடம் பெற்றுக்கொள்வதற்கு 2020 யூன் மாதமாகும்போதும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | காணி சுவீகரித்துக் கொள்வதற்காக காணி கட்டளைச் சட்டத்தில் 6 ஆவது பிரிவு பிரகாரம் கட்டணமின்றி சம்பந்தப்பட்ட காணிகளை கையேற்பதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இப் பிரச்சினை மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் கவனத்திற்கும் முன்வைக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட காணிகளில் சட்டத்துடனான உரிமை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணியாற்றொகுதியில் 119 வெற்றிடங்கள் நிலவியதால் மீளாய்விற்கான ஆண்டில் வெளியக விரிவுரையாளர்களிடமிருந்து சேவை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ரூபா. 48,682,049 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பல்வேறு பிரச்சினைகள் காரணமாக வெற்றிடங்களாகிய பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புகள் பல மாதங்கள் தாமதமாயினும், தற்போது விரிவுரையாளர் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்காலிக கல்விசார் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புகளை மேற்கொண்ட போதிலும் மீண்டும் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கவனிக்கத்தக்க அளவிலான காலம் செல்கின்றது. கல்விசார் உதவி பணியாற்றொகுதி பதவிகளில் “ வகிப்பவருக்கு தனிப்பட்ட வகையில்” என்று பணியாற்றொகுதி | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கையில் குறிப்பிடப்படு-வதால் அப் பதவிகள் வெற்றிடமாகியவுடன், மீண்டும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இயலாதுள்ளது. | |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிருவாகம், சிதிசார் மற்றும் நிறைவேற்று தரத்தி-லான 27 பதவிகளும் ஏனைய கல்வி சார் பணியாற்றொகு-தியில் 123 பதவிகளும் என்ற வகையில் 150 வெற்றிடங்கள் நிலவியதுடன், மீளாய்விற்கான ஆண்டில் லீவு தின சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடு-ப்பனவாக ரூபா. 50,235,891 செலுத்தப்பட்டிருந்தது. | நிதிசார் மற்றும் நிறைவேற்று அலுவலர் பதவிகளில் உள்ள வெற்றிடப் பதவிகளில் 04 பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>உதவி பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுமூலம் மேற்கொள்ளப்படுகிறது. நிரல் வரிசை அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய கல்விசாரா பணியாற்-தொகுதியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நீண்டகாலம் செல்லும். பெரும்பாலான வெற்றிடங்களை நிரப்பும்-போது, ஆட்சேர்ப்புத் திட்டம்படி முதலாவதாக உள்ளக ரீதியாக ஆட்-சேர்ப்புச் செய்கையில் வேறு ஒரு பதவியில் வெற்றிடங்கள் ஏற்படும். அதேபோன்று கல்விசாரா பணியாற் தொகுதியில் பெரும்பாலான பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உயர் கல்வி அமைச்சின் பெயர் அட்ட-வணை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை பிரகாரம் 2019.01.01 ஆந் திகதி தொடக்கம் நடை-முறைப்படும் வகையில் பல்கலைக்கழக பணியாற்-தொகுதியில் சம்பள மீள்திருத்தம் காரணமாக மேலதிக நேர கொடுப்பனவு அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 வரவு செலவு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் வரவு செலவு பதிவேடுபடி செலவினம், உண்மையான செலவினம் என்பன ஒப்பிடுகையில் மீண்டுவரும் செலவினங்களில் 4 விடயங்களுக்கு ஏற்புடையதாக 31% - 73% மற்றும் மூலதனச் செலவினங்களில் ஒரு விடயத்திற்கு 66% எஞ்சியிருத்தல் அவதானிக்கப்பட்டது. | 2019 ஆண்டில் நிலவிய கல்விசாரா ஊழியர் பணி பகிஷ்கரிப்பும், பாஸ்கு தின தாக்குதலும் காரணமாக 2019 ஆம் ஆண்டில் கல்விசார், கல்விசாரா நடவடிக்கைகளை திட்டமிட்டப்படி நிறைவேற்றிக்கொள்வதற்கு இயலாமையால் செலவினத்தையும் பார்க்க உண்மையான செலவினம் குறைந்த பெறுமதியைக் கொள்வதற்கு பிரதான காரணமாகியுள்ளது. | பயனுள்ள நிதி கட்டுப்பாட்டு காரணியாக வரவு செலவு பதிவேடை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |